**பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி – 2018**

---

## 1.1 அபிப்பிராயம்

பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான

கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு கீழே குறிப்பிடப்பட்டு உள்ளடக்கப்பட்டிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிர்மாண ஒப்பந்தங்கள் மற்றும் பணிக்கொடை விசேட படி போன்ற விசேட கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது னரிய கொடுப்பனவு சரியாக மேற்கொள்ளப்பட்டிருந்ததா என்பதை உள்ளகக் கணக்காய்வு உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | கொடுப்பனவின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவது தொடர்பாக உளளகக் கணக்காய்வாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | கொடுப்பனவுகளை மேற்கொள்ள முன்னர் கொடுப்பனவுகளின் சரியான தன்மை தொடர்பான உறுதிப்படுத்தல் பெறப்பட வேண்டும். |

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 22,353,215 பெறுமதியான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட மோட்டார் வாகனங்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் மோட்டார் வாகனங்கள் தொடர்பாக மீண்டும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | மீள்மதிப்பீடு விரைவாக செய்யப்பட வேண்டியதுடன் அதற்கிணங்க தேவையான சீராக்கங்கள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நீர் வழங்கல் சபையிடமிருந்து 2000 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,387,445 கடன் மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்வதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | நீண்டகால நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) நிதிப்பிரமாணங்கள் 570 மற்றும் 571 | 2001 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட | எழுத்து மூலம் கடன்கொடுத்தோரிற்கு | வைப்பு மீதிகளை விரைவாக |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 17,930,000 தொகையான மீளளிக்கத்தக்க காலங்கடந்த வைப்பு மீதிகள் பிரமாணங்களின் பிரகாரம் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிவிக்கப்பட்டுள்ளது. | தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2003 யூன் 03 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>(i) 5.2.4 ஆம் பிரிவு | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களிற்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக வரைபுப் பாதீடு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2017 திசெம்பர் 27 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிலிருந்து 03 மாதங்களிற்கு முன்னர் கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 8.2.3 ஆம் பிரிவு | முன்னைய ஆண்டுகளில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 314,962,683 தொகையான நிலையான வைப்புக்களிற்காக நிதி அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி அங்கீகாரம் தாமதமாகியிருந்தது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் உரிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (இ) 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 2015.˙.01 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 01 ஆம் பிரிவு | ரூபா 15,000 விலைவீதத்திலான போக்குவரத்துப் படியொன்று அதற்கான திறைசேரி அங்கிகாரமின்றி பணிப்பளர் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரம் 4 உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. | அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 74,263,916 மிகையொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 99,899,337 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 25,635,421 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. விற்பனை வருமானம் குறைவடைந்தமை மற்றும் நிர்வாகச செலவினம் அதிகரித்தமை என்பன மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

## 2.2 பிரதான வருமான விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| வருமானம் | 2017 | 2018 | முரண் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| குளோரின் | 273,449,500 | 267,390,350 | 6,059,150 | 2 |
| Caustic சோடா துகள்கள் | 58,697,350 | 32,510,719 | 26,186,631 | 44 |
| Caustic சோடா திரவம் | - | 156,930 | 156,930 | 100 |
| Hydrochloric அமிலம் | 2,757,480 | 2,549,196 | 208,284 | 7 |
| பிளீச்சிங் திரவம் | 1,989,517 | 20,450 | 1,969 | 99 |
| மொத்தம் | 336,893,847 | 302,627,645 | 34,580,062 | 10 |

மீளாய்வாண்டின் பிரதான வருமானத்தில் ஏற்பட்ட மொத்த வீழ்ச்சி 10 சதவீதமாக காணப்பட்ட போதிலும் ஒவ்வொரு இரசாயனத்தையும் தனித்தனியாக கருத்தில் கொள்ளும் போது குளோரின் தவிர்ந்த இரசாயனங்களின் விற்பனையில் துரித வீழ்ச்சி அவதானிக்கப்படுகின்றது. கம்பனியிலுள்ள 02 இரசாயனங்களின் உற்பத்தி நடவடிக்கைகள் தோல்வியடைந்தமை இதற்கான காரணமாகும்.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

| விகிதங்கள் | 2018 | 2017 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1:6 | 1:8 |
| மொத்தலாப விகிதம் | 51% | 48% |

நடைமுறைச் சொத்துக்களில் குறுங்கால நிலையான வைப்புக்கள் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக நடைமுறைச் சொத்து விகிதம் உயர் பெறுமதியை எடுத்திருந்ததுடன் விற்பனை வருமானம் குறைவடைந்தமை மொத்தலாபத்தில் வீழ்ச்சியை விளைவித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1955 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையால் உரித்தாக்கப்பட்ட கட்டிடமொன்றில் கம்பனியின் தலைமை அலுவலகம் தொழிற்பட்டு வருகின்றதுடன் 2015 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தக் குத்தகை அடிப்படையில் அதிகாரசபையுடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. கம்பனியால் கட்டிடம் உரித்தாக்கப்பட்டிருக்காத போதிலும் நிதிக்கூற்றுக்களில் கட்டிடங்களின் கீழ் ரூபா 6,350,000 மதிப்பிடப்பட்ட பெறுமதி காட்டப்பட்டிருந்தது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ரூபா 12,509,678 | காணியை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ரீதியான உரிமைத்துவத்தை கையேற்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

தொகையான திருத்தங்கள் தொடர்பான செலவினம் ஏற்பட்டிருந்தது.

## 3.2 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1986 ஆம் ஆண்டிலிருந்து பரந்தன் தொழிற்சாலையில் குளோரின் உற்பத்தி நிறுத்தப்பட்டதன் காரணமாக நாட்டிற்கு தேவையான Caustic சோடா மற்றும் குளோரின்களை வழங்குதல் முழுமையாக இறக்குமதி செய்வதில் தங்கியிருந்தது. 227 ஏக்கர் பரப்பளவான காணி பரந்தன் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் இதனை ஆரம்பிக்க முடியாதிருந்தது. 20 ஏக்கர் பரப்பளவான காணியில் வர்த்தகப் பெறுமதியான பொறிகளை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 2016, 2017 மறறும் 2018 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 2,552,730, ரூபா 433,435 மற்றும் ரூபா 631,680 தொகைகள் அதற்காக செலவிடப்பட்டிருந்தன. | மிகப் பெரிய முதலீடொன்றுடன் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்காக சுற்றாடல் நியமங்களிற்கு பொருத்தமான தொழில்நுட்பமொன்று தேவைப்படுகின்றதுடன் அரசாங்கத்தின் புதிய முன்மொழிவுகளின் பிரகாரம் சுற்றாடலிற்கு நட்பு ரீதியிலான கைத்தொழில் வலயத்தை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடுவதற்கு முன்மொழிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | குளோரினை உற்பத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கையை முகாமைத்துவம் விரைவாக எடுக்க வேண்டும். |
| **Caustic சோடா திரவத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டம்** | | |
| Caustic சோடா திரவத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 3,279,994 தொகை செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் உற்பத்தி மற்றும் விற்பனைகள் எதுவும் நாளதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் கணக்காய்வுத் திகதியளவில் உற்பத்திக்காக மேற்கொள்ளப்பட்ட தொட்டிகள் மற்றும் குழாய்கள் உற்பத்தி நடவடிக்கைகளிற்கு பொருத்தமற்ற நிலைமையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | உற்பத்திப்பொருளை பெறக்கூடிய போதிலும் போட்டித்தன்மை காரணமாக சந்தையை கண்டறிய முடியாதிருந்ததுடன் சந்தைக்குப் பொருத்தமான தரம் காணப்படவில்லை. | உற்பத்திகளிற்கான தரத்தை மேற்கொள்வதற்கும் உற்பத்திகளிற்கான சந்தையொன்றை கண்டறிவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

-------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) Caustic சோடா திரவத்தை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் பக்கற் ஒன்று 25 கிலோகிராம் நிறை வீதம் கொள்வனவு செய்யப்பட்ட 5000 பக்கற் Caustic சோடா துகள்களில் 2,087 பக்கற்றுக்கள் 2018 திசெம்பர் 31 வரையிலும் விற்பனை அல்லது உற்பத்திக்காக பயன்படுத்தப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் அத்தகைய பக்கற்றுக்களில் 1,059 Caustic சோடா பக்கற்றுக்களிற்கான காலாவதியாகும் திகதி 2019 ஏப்ரல் ஆக காணப்பட்டது. | சந்தைப்படுத்தல் பிரிவின் வேண்டுதல்களின் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உள்ளூர் சந்தையில் விலைகள் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேவைப்பாட்டை குறிப்பாக இனங்கண்ட பின்னர் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுவதை முகாமைத்துவம் உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஆ) 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.1.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் உள்ளூர் ஒப்பந்ததாரர்களின் இயலளவு மட்டுப்படுத்தப்படும் போது சர்வதேச போட்டிக் கேள்வி நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். எனினும் குளோரின் இறக்குமதியின் போது தேசிய போட்டிக் கேள்வி பின்பற்றப்பட்டிருந்ததுடன் வெளிநாட்டுக் கம்பனிகளின் உள்ளூர் முகவர்கள் ஊடாக கூறுவிலைகள் கோரப்பட்டு சில உள்ளூர் முகவர்களுடாக வருடாந்தம் இக் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. குளோரின் இறக்குமதிக்காக உள்ளூர் முகவர்களிற்கு 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 14,332,650 தொகையான தரகு செலுத்தப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட வேண்டிய தரம் தொடர்பாக துண்டு மற்றும் பொதி அணுகுமுறையை பின்பற்றுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அனைவராலும் ஒரே விலை சமர்ப்பிக்கப்பட்டதன் காரணமாக அனைவரிற்கும் | இருதரப்பு உடன்படிக்கையொன்றின் கீழ் இரசாயனங்களை கொள்வனவு செய்வதற்காக அமைச்சுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்படும். | சர்வதேச போட்டிக் கேள்வி பின்பற்றப்படுவதையும் அதிகூடிய கேள்வி பெறப்படுவதையும் ஆகக்கூடிய நன்மைகள் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதையும் முகாமைத்துவம் உறுதிப்படுத்த வேண்டும். |

அவற்றை வழங்கியிருந்தது. இதனால் கம்பனி குளோரினின் கொள்வனவு விலையாக கேள்விதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விலையை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தை கம்பனி தயாரித்திருக்காத போதிலும் பின்வரும் தொழிற்பாடுகளின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ளுதல் தொடர்பான செயன்முன்னேற்றம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிலிருந்து செயல்நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதன் செயன்முன்னேற்றம் தயாரிக்கப்படுவதற்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | கம்பனியின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கும் தூரநோக்குகளை அடைந்து கொள்வதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| • நீர் வழங்கல் சபைக்கு குளோரின் வழங்கப்படுகின்ற விலையை பேணுதல் மற்றும் கடன் எல்லையை அதிகரித்தல், புதிய நீர் செயற்திட்டங்களிற்காக திரவ குளோரினை அறிமுகப்படுத்துதல், வேறு இரசாயனங்களை பயன்படுத்தும் தொழில்நிறுவனங்களிற்கு குளோரினை வழங்குதல், கொள்வனவாளர்களிற்கான பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் போன்ற திட்டங்களின் கீழ் அமுல்ப்படுத்தல் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றை அமுல்ப்படுத்துவதற்காக நீர் வழங்கல் சபையுடன் கலந்துரையாடல்களை நடாத்துதல், புதிய கொள்வனவாளர்களை கண்டறிந்து தெரியப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

- 4 பிரதான இரசாயனங்களை இறக்குமதி செய்வதற்கும் 2 இரசாயனங்களை உற்பத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் குளோரினை இறக்குமதி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் வருமானத்தில் 89 சதவீதமாக இருந்ததால் கம்பனி இதில் தங்கியிருக்கின்றது. மேலும், உள்ளூர் தொழில்நிறுவனங்களிற்கு இரசாயனங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் இரசாயன தலைமை தாங்கும் இலக்கை அடைந்து கொள்வதற்கு கம்பனியால் முடியாதிருந்தது.

ஏனைய இரசாயனங்களுக்கான போட்டி விலைகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கம்பனியின் விலைகள் அதிகரிக்கப்படுகின்றன.